1969 செப்டம்பர் 12]

வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இருக்கின்ற ஸ்டாக்கைக் கணக்கில் எடுத்து, காலதாமதம் இல்லாமல், ஒரு வாரத்திற்கு முன்னதாகவே வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு முன்பாகத்தான் அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்படித்தான் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஏதாவது காலதாமதம் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

சிதம்பரம் நகரில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

* 248 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் டவுனில் வாடகை கட்டடத்தில் இருக்கும் கால்நடை மருத்துவ மனைக்கு அரசாங்க கட்டடம் கட்ட திட்டமுண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை, ஐயா.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலுகா பெரிய தாலுகா. அதிலும் பெரிய முனிசிபாலிடி. ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் வாடகைக் கட்டடம் சிறு கட்டடமாக இருக்கிறது. ஆகவே, நல்ல ஒரு கட்டடத்தைக் கட்டி கால்நடைகளின் உபயோகத்திற்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நகராட்சிப் பகுதிகளில் கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு மானியமோ அல்லது கடனோ அரசு வழங்குவது இல்லை. கிராமப் புறங்களில் கட்டுவதற்குத்தான் 30,000 ரூபாய் வரை வேளாண்மைத் துறையின்கீழ் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, நகராட்சிப் பகுதிகளில் அந்தந்த நகராட்சியின் நிதிநிலையைப் பொருத்து அவர்களே கட்டடங்களைக் கட்டிக் கொள்ளலாம்.

Vaigai Irrigation Scheme.

* 249 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) Whether the Vaigai Irrigation Scheme has been remodelled ;

(*b*) if so, at what cost ; and

(*c*) what are its special features?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மன்றத்தின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 174-175-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.